# DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**
**ST.C.No. 142/2022 P.W. 1 வீரமணி த/பெ. ரத்தினம்**

நாள் 05.11.2025

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாககல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3) 2020 மற்றும் 2021 ம் ஆண்டிற்கு வருமான வரி செலுத்தினேனா என்றால் வருமான செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லை என்பதால் செலுத்தவில்லை. 2020 மற்றும் 2021 ம் ஆண்டில் ஆண்டுவருமானம் ரூ.2,50,000/- இருந்தால் வருமான வரி செலுத்த வேண்டும் என்ற விதி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ஆண்டிற்கு ரூ.2,50,000/- மேல் வருமானம் கிடையாது. வழக்கில் சொல்லப்பட்டியிருக்கும் ரூ.5,00,000/- க்கு வட்டி எதுவும் உண்டா என்றால் வட்டியே கிடையாது.

4) எதிரி எனது உறவினரோ, எனது சமூகத்தினரோ கிடையாது என்றால் சரிதான். நட்புதான். எனக்கு வயது 54 என்றால் சரிதான். எதிரிக்கு வயது 70 என்றால் சரிதான். எதிரிக்கு நான் நண்பர் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி எனக்கு நண்பர் என்று சொல்லியுள்ள நிலையில் எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்று அறிவிப்பிலோ, மனுவிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மனுவில் சொல்லியுள்ளேன்.

5) ரூ.5,00,000/- தொகை என்பது சாதாரண தொகை என்றால் சரிதான். வழக்கில் கடனாக கொடுத்ததாக சொல்லியிருக்கும் நிலையில் பணம் கொடுததாக சொல்லப்படும் நேரத்தில் அத்தாட்சிக்கு எதுவும் ஆதரவு ஆவணம் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. அப்போது கடனை 3 மாதத்தில் திருப்பி தருவதாக சொல்லியிருந்ததால் நான் வாங்கவில்லை. மேற்படி சங்கதிகளை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த தருணத்திலும் என்னிடம் கடன் பெறவில்லை என்றால் சரியல்ல.

6) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, மனுவில் , நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் எல்லாம் 6 மாத்தில் திருப்பி தருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.5,00,000/- தொகையை எந்த தேவைக்காக கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை எனது அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. ஆனால் கான்டிராக்ட்க்காக என்று ரூ.5,00,000/- பெற்றுக்கொண்டார். 2020 ம் காலக்கட்டத்தில் எதிரி எந்தெந்த ஊர்களில் கான்டிராக்ட் வேலை எடுத்திருந்தார், என்ன வேலைக்காக எடுத்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7) ரூ.50,000/- மேல் எந்த பரிவர்த்தனை செய்தாலும், வங்கி மூலம் தான் பரிவர்த்தனை செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் மன்னார்குடியில் ஒரு முக்கிய கட்சியில் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஆட்டோ ஓட்டுநராக

உள்ளேன். தற்போது மன்னார்குடி ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தில் தலைவராக உள்ளேன் என்றால் தற்சமயம் இல்லை. ஏற்கெனவே இருந்தேன். என்னுடை மனைவி மன்னார்குடி நகர் மன்ற உறுப்பினர் பதவிக்கு 2022 ம் வருடம் போட்டியிட்டார் என்றால் சரிதான். மேற்படி தேர்தலில் போட்டியிட்டதற்கு என்னுடைய மனைவி மற்றும் எனது சொத்து குறித்து விபரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வேட்பாளர் ஆன எனது மனைவியின் சொத்து குறித்து தாக்கல் செய்துள்ளார். எனக்கு அவசியம் இல்லை. என்னுடைய சொத்துக்கள் குறித்தும் குறிப்பிட வேண்டும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) ஆட்டோ ஓட்டுநர் தொழில் மட்டும் தான் நான் செய்கிறேன். வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. 2020 ம் ஆண்டு கொரானா பெருந்தொற்று ஏற்பட்டு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். குறிப்பாக 2020 மார்ச் முதல் டிசம்பர் மாதம் வரை ஆட்டோ தொழில் ஊரடங்கு உத்தரவால் நலிவடைந்து இருந்தது என்றால் கொஞ்சம் கொஞ்சம் ஆட்டோ ஓட்டி கொண்டிருந்தோம். நான் வேலை வாய்ப்பு இல்லாத நேரத்தில் ரூ.5,00,000/- கடனாக எதிரிக்கு கொடுத்தது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

9) ஆண்டிற்கே ரூ.2,50,000/- மேல் வருமானம் ஈட்டாத நான் எந்தவொரு ஆதரவு ஆவணம் இன்றி எதிரிக்கு ரூ.5,00,000/- கடனாக கொடுத்ததாக கூறுயிருப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு எந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் மன்னார்குடி சிட்டியூனியன் வங்கி, மன்னார்குடி இந்தியன் ஓவர்சீஸ் ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. கும்பகோணம் பரஸ்பரஸ் சகாயநிதி வங்கியிலும் கணக்கு உள்ளது. 2020-2021 ஆகிய காலக்கட்டங்களில் அதிகபட்ச பரிவர்த்தனை எவ்வளவு தொகை நடைபெற்றிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடை ய வங்கி கணக்கில் எவ்வளவு தொகை வைத்திருப்பேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

10) என்னுடைய வங்கி கணக்குகளில் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எவ்விதமான ஆட்பணையும் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய புகாரில் எதிரி 2020 ஆகஸ்ட் மாதம் இறுதியில் கடன் கேட்டதாக சொல்லியிருக்கும் நிலையில் மேற்படி விபரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் குடியிருப்பது மேல வடம்போக்கி தெரு என்றால் சரிதான். மன்னார்குடி அசேஷசம் கிராமம் என்பது மேற்படி இடத்தில் இருந்து 3 கி.மீ. அப்பாலுக்கு உள்ள பகுதி என்றால் சரிதான்.

11) எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார். நான் அதனை படிக்கவில்லை. எதிரியின் வழக்கானது நான் எதிரிக்கு பரீட்சயப்பட்ட நபர் அல்ல என்றும், மன்னார்குடி நகரம், உப்புகார தெருவில் வசிக்கும் சிங்காரம் மகன் ஜெயராஜ் என்பவர் எதிரிக்கு சொந்தமான காசோலைகளை வைத்து எதிரிக்கு எதிராக என்னை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்து அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) ஜெயராஜ் எனது நண்பர் என்றால் சரிதான். எதிரியும் நண்பர் தான். காசோலையில் உள்ள கையொப்பமும், மேலே உள்ள எழுத்துகளும் வேறு வேறு மையால் உள்ளது என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. அவரே எழுதி கொடுத்தது.  கையெழுத்து என்பது இடது புறத்தில் இருந்து வலது புறமாக எழுதுவது என்றால் சரிதான்.  ஆனால் இந்த காசோலையில் உள்ள  கையெழுத்தானது கீழ் இருந்து மேல் நோக்கி உள்ளது என்றால்  அவர் அப்படி தான் போட்டார்.

13) வழக்கு காசோலையை எங்கு வைத்து கொடுத்தார் என்று எனது அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. அவர் வீட்டில் வைத்து கொடுத்தார். மேற்படி சங்கதி தற்சமயம் என்னால் பொய்யாக புகுத்தப்படுகிறது என்றால் சரியல்ல.  2020 ம் ஆண்டில் எதிரி அசேஷசத்தில் எந்த வீதியில் எந்த தெருவில், எந்த கதவு எண்ணில் குடியிருந்தார் என்று தெரியுமா என்றால்  எனக்கு தெரியும்.  கதவு எண் என்ன என்றால் கதவு எண். 23 என்று நினைக்கிறேன். எதிரியின் முகவரி எல்லாம் ஜெயராஜ் என்பவர் மூலம் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது எனக்கு வழங்கப்பட்டது என்றும், எதிரியின் முகவரி எனக்கு நேரிட்டு தெரியாது என்றும், அவ்வாறு தெரிந்திருந்தால் தற்சமயம் எதிரியின் சரியான முகவரி மற்றும் தெரு பெயர் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றால் சரியல்ல.

14) என்னுடைய செல்போன் எண்.9443170402 . என்னுடைய செல்போன் கம்பெனி BSNL. நானும், ஜெயராஜீம் செல்போனில் பேசிக்கொள்வது வழக்கம் தான்.  வழக்கு முன்பாக எந்த தருணத்திலாவது எதிரியின் செல்போனிற்கு மேற்படி செல்போன் எண்ணில் இருந்து அழைத்துள்ளேனா என்றால் இல்லை.  எந்த தருணத்திலும் எதிரி எனக்கு பரீட்சயப்பட்ட நபர் இல்லை என்றும், எதிரி எந்த தருணத்திலும் கடன் பெறவில்லை என்றும், அதற்கு ஆதரவாக எந்த தருணத்திலும் வழக்கு காசோலை  வழங்கவில்லை என்றும், எதிரியின் காசோலையை பிணையமாக வைத்திருந்த ஜெயராஜ் என்னை வைத்து தவறாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.  எனக்கு வழங்கப்படாத காசோலை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.